செய்தி வெளியீடு எண் : 27 நாள் :21.07.2020

**தேனி மாவட்டம்**
**கொரோனா வைரஸ் (COVID-19) தடுப்பு நடவடிக்கையாக பெரியகுளம் பகுதியில் கொரோனா நல மையம் ஏற்படுத்துவது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-**

*****

தேனி மாவட்டம், பெரியகுளம் அரசு மருத்துவமனையில் செயல்பட்டு வரும் செவிலியர் பயிற்சி கல்லூரி மற்றும் மாணவியர் விடுதியினை கொரோனா நல மையமாக மாற்றியமைப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை இன்று (21.07.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப.. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தெரிவித்ததாவது,

தேனி மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்றினை கட்டுப்படுத்திட பல்வேறு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக வெளிமாநிலங்கள், வெளி மாவட்டங்களிலிருந்து தேனி மாவட்டத்திற்கு வருகை புரிந்தவர்களிடமிருந்து இந்நோய் தொற்று பரவி வருவதற்கு அதிக வாய்ப்பு உள்ளதால், இதனை கட்டுப்படுத்திட மாவட்ட எல்லைப்பகுதிகளில் தீவிர மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நோய் தொற்றினால் பாதிக்கப்படுபவர்களுக்கு கூடுதலாக படுக்கை வசதிகளுடன் சிகிச்சை அளிப்பதற்கு ஏதுவாக, மாவட்டத்தில் தேனி என்.ஆர்.டி. நினைவு அரசு மருத்துவமனை, தேக்கம்பட்டி அரசினர் பல்வகை தொழில் நுட்ப கல்லூரி, போடிநாயக்கனூர் அரசு பொறியியல் கல்லூரி, வடபுதுப்பட்டி தனியார் பொறியியல் கல்லூரி, கொடுவிலார்பட்டி தனியார் பொறியியல் கல்லூரி, உத்தமபாளையம் தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குள்ளப்புரம் தனியார் வேளாண்மை கல்லூரி மற்றும் சித்த மருத்துவமுறையில் மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக பெரியகுளம் தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி என மொத்தம் 8 இடங்களில் கொரோனா நல மையங்கள் அமைக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், இம்மையங்களின் மூலம் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு தரமான மருத்துவ சிகிச்சைகள், உணவு மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, சிகிச்சை மேற்கொள்பவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், யோகா பயிற்றுநர்கள் மூலம் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

கொரோனாவால் பாதிக்கப்படுபவர்களுக்கு கூடுதலாக சிகிச்சை அளிப்பதற்கு ஏதுவாக பெரியகுளம் அரசு மருத்துவமனையில் செயல்பட்டு வரும் செவிலியர் கல்லூரி மற்றும் மாணவியர் விடுதியினை தற்சமயம் கொரோனா நல மையமாக மாற்றியமைப்பதற்கென மேற்கொள்ளப்பட்டும் வரும் நடவடிக்கைகள் தொடர்பாக இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், பொதுமக்கள் தேவையற்ற காரணங்களுக்காக வெளியே செல்வதை தவிர்த்து, அத்தியவசிய தேவைகளுக்காக மட்டுமே வெளியில் செல்ல வேண்டும். வெளியே செல்லும் போது கட்டாயம் முககவசம் அணிவது, வீட்டிற்கு நுழைவதற்கு முன் கிருமி நாசினி திரவம் கொண்டு கைகளை நன்கு கழுவுவது, சமூக இடைவெளியை கடைபிடிப்பது மற்றும் தங்களின் சுற்றுப்புறப்பகுதிகளை சுகாதாரமாக வைத்து கொள்வது போன்ற நடவடிக்கைகளை சரிவர மேற்கொண்டால் மட்டுமே, நாம் கொரோனா தொற்றினை முற்றிலும் தவிர்த்திட முடியும்.

குறிப்பாக, பொதுமக்கள் கொரோனா தொடர்பான அறிகுறிகள் ஏற்படின் அருகில் உள்ள அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார மையங்களை தொடர்புக்கொண்டு, தங்களையும், தங்களது குடும்பத்தினர்களையும் பாதுகாத்து கொள்ள வேண்டும். மேலும், அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் உறுதுணையாக இருந்து, தங்களையும், சமூகத்தையும் பாதுகாத்திட உறுதுணையாக இருந்திட வேண்டும் என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, பெரியகுளம் சார் ஆட்சியர் செல்வி டி.சிநேகா, இ.ஆ.ப., இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.லெட்சுமணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**